**<u>சுருக்கம்</u>**

கலைஞர் வீடு வழங்கும் திட்டம் – 2010–2011 – நிர்வாகச் செலவு ரூ.24,53,86,000/–ஐ ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை

அரசாணை (நிலை) எண்.96 நாள்: 01.10.2010

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (1டி) எண்.153, ஊ.வ (ம) ஊ. துறை, நாள் 26.3.2010.
2) அரசாணை (நிலை) எண்.68, ஊ.வ (ம) ஊ. துறை, நாள் 14.6.2010.
3) அரசாணை (நிலை) எண்.74, ஊ.வ (ம) ஊ. துறை, நாள் 16.7.2010.
4) அரசாணை (நிலை) எண்.81, ஊ.வ (ம) ஊ. துறை, நாள் 05.08.2010.
5) அரசாணை (நிலை) எண்.87, ஊ.வ (ம) ஊ. துறை, நாள் 20.8.2010.
6) அரசாணை (நிலை) எண்.89, ஊ.வ (ம) ஊ. துறை, நாள் 30.8.2010.
7) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.32318/2010/KVVT, நாள் 09.09.2010.

*****

**<u>ஆணை:</u>**

மேலே இரண்டு முதல் ஐந்து வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் ஊரகப் பகுதிகளில் ஓலைக்கூரை வேயப்பட்ட தகுதியுள்ள அனைத்துக் குடிசைகளையும் கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளாக மாற்ற கலைஞர் வீடு வழங்கும் திட்டம் எனும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்தவும், அதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்தும், நடப்பு ஆண்டில் திட்டத்தை செயல்படுத்த ரூ.2,250 கோடி ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது 09.09.2010 நாளிட்ட கடிதத்தில் நடப்பு ஆண்டில் ரூ.2,250 கோடி செலவில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து பொதுமக்களுக்கும், இத்திட்டத்தில் பங்கேற்பவர்களுக்கும் தெரியபடுத்துவதற்காக 1) பல்வேறு தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கும், 2) நடப்பாண்டில் வீடுகள் கிடைக்கப்பெறாத தகுதியுள்ள எஞ்சிய நபர்களுக்கு அடையாள அட்டைகள் (Eligibility Cards) வழங்குவதற்காகவும், 3) சில அத்தியாவசியமான பதிவேடுகளை அச்சிட்டு வட்டார அளவில் தொழில் நுட்ப பணியாளருக்கு வழங்குவதற்காகவும் மற்றும் 4) திட்டத்தினை திறம்பட கண்காணிக்க கணினி, அதிக அளவில் நகல் எடுக்கும் மற்றும் அச்சிடும் சாதனங்கள், கணினி பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் எழுதுப்பொருட்கள் கொள்முதல் செய்து வழங்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்து, ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட தொகை போக மேலும் ரூ.24,53,86,000/–ஐ ஒப்பளிப்பு செய்யுமாறு அரசிடம் கோரியுள்ளார்.

**3.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்றுக்கொள்ளலாமென முடிவு செய்துள்ளது. அவ்வாறே கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தினை சிறப்புடன் செயல்படுத்தவும், திறம்பட கண்காணிக்கவும் நிர்வாகச் செலவுக்காக **2010–11–**ஆம் ஆண்டுக்கு ரூ.**24,53,86,000/– (**ரூபாய் இருபத்து நான்கு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து எண்பத்தாராயிரம் மட்டும்)யை பின்வரும் இனங்களுக்காக அவைகளுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு ஒப்பளிப்புச் செய்து ஆணையிடுகிறது.

| வ. எண். | தலைப்பு | | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | <u>தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் (Information, Education and Communication Activities)</u> | | |
| | அ) கலைஞர் வீடு வழங்கும் திட்ட தகவல் பலகைகளை நிறுவுதல் (Installation of Kalaignar Housing Scheme Information Boards) (தலா ரூ.**2,500/–** செலவில் **35,000** தகவல் பலகைகள்) | ரூ.**8,75,00,000/–** | |
| | ஆ) திட்டத்தில் பங்கேற்பவர்களுடன் கூட்டம் நடத்துதல் (Conduct of meeting with Stakeholders) (12,618 கிராம ஊராட்சிகளில் ஒரு கூட்டத்திற்கு ரூ.**3,000** வீதம்) | ரூ.**3,78,54,000/–** | |
| | இ) சுவரொட்டிகள் அச்சிடுதல் (Printing of Posters) (தலா ரூ.**30/–** செலவில் **65,000** சுவரொட்டிகள்) | ரூ.**19,50,000/–** | |
| | துணை மொத்தம் | | **12,73,04,000/–** |
| 2. | தகுதி அட்டைகள் அச்சிடுதல் (Printing of Eligibility Cards)<br><br>(அச்சு, புகைப்படம் அச்சிட்டு ஒட்ட மற்றும் காப்புறை (Lamination) ஆகியவற்றிற்கு தலா ரூ.**50/–** செலவில் **13.5** இலட்சம் அட்டைகள்) | | **6,75,00,000/–** |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3. | பரிந்துரைக்கப்பட்ட பதிவேடுகள் மற்றும் அளவுப் புத்தகங்கள் அச்சிடுதல் (Printing of prescribed Registers and Measurement Books)<br><br>அ) பதிவேடுகள் அச்சிடுதல் (Printing of Registers)<br>(தலா ரூ.70/– செலவில் 24,000 பதிவேடுகள்)<br><br>ஆ) அளவுப் புத்தகங்கள் அச்சிடுதல் (Printing of Measurement Books)<br>(தலா ரூ.50/– செலவில் 3 இலட்சம் அளவுப் புத்தகங்கள்)<br><br>துணை மொத்தம் | <br><br><br>ரூ. 16,80,000/–<br><br><br>ரூ.1,50,00,000/– | <br><br><br><br><br><br>1,66,80,000/– |
| 4. | திறம்பட கண்காணிக்க அலுவலக கணினி உபகரணங்கள் வாங்குதல் (Purchase of Computers and Printers for effective monitoring)<br><br>அ) கணினிகள் கொள்முதல் (Purchase of Computers)<br>(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம், 31 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு தலா இரண்டு வீதம் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கு தலா ஒன்று வீதம் மொத்தம் 449 கணினிகள் தலா ரூ.50,000 செலவில்)<br><br>ஆ) அதிக அளவில் நகல் எடுக்கும் மற்றும் அச்சிடும் சாதனங்கள் கொள்முதல். (Purchase of Heavy Duty copier – cum - Printer )<br><br>(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம், மற்றும் 31 மாவட்ட ஊரக வளர்ச்சி ஊராட்சி முகமைகளுக்கு தலா ஒன்று வீதம் மொத்தம் 32 சாதனங்கள் தலா ரூபாய் இரண்டு இலட்சம் செலவில்) | <br><br><br>ரூ.2,24,50,000/–<br><br><br>ரூ. 64,00,000/– | |

| | | | |
|---|---|---|---|
| | இ) கணினி பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் எழுதுப் பொருட்கள். (Supply of Computer consumables and Stationeries)<br><br>(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகத்திற்கு மாதம் ரூ.5,000/– வீதமும், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 31 மாவட்ட ஊராட்சி முகமைகளுக்கு தலா மாதம் ரூ.1,000/– வீதம் ஒரு வருடத்திற்கு)<br><br>துணை மொத்தம் | ரூ. 50,52,000/– | **3,39,02,000/–** |
| | ஒப்பளிக்கப்படும் மொத்த தொகை<br><br>(ரூபாய் இருபத்து நான்கு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து எண்பத்தாராயிரம் மட்டும்) | | **24,53,86,000/–** |

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்.

4216 – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – 03 ஊரக வீட்டு வசதி 800 – ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் JA – கலைஞர் வீட்டு வசதித் திட்டம் 16 – பெரும் பணிகள் (து.தொ.கு. 4216-03-800-JA-1601)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் புது துணைப் பணிகள் (New Instrument of Service) குறித்த செலவினமாகும். இதற்கான சட்டப்பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையில் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு செலவு பொது 1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன் பணம் ஒப்பளிப்பு பெற உரிய படிவத்தில், இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.பொது–1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு, இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கை 2010–11 (Supplementary Estimates 2010–11)–இல் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வரவு செலவு பொது 1) துறைக்கு அனுப்புமாறு இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.185/JS(PM)/10, நாள் 01.10.2010–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 1074 (ஆயிரத்து எழுபத்து நான்கு)

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை -15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்.
அனைத்து மாவட்ட ஊராட்சிகள்.
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை, சென்னை–9.

**<u>நகல்</u>**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊவ/வரவு செலவு பொது I/II) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்